# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22


Vol - 19 | May மே | 2018

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

WRAPPER PHOTO TAKEN BY EDITOR, PHILEMON RAJAH

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| தேவன் அருளிய ஈவு | 3 |
| தனி நபர் வேத ஆராய்ச்சி... | 7 |
| மரியாள் தேர்ந்தெடுத்த... | 10 |
| சிறுவர்பகுதி | 11 |
| வேதாகமத்தின் 66... | 13 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி


செய்தியாளர்


சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**




**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,


Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**"வேதத்தின் மகத்துவங்களை பிரதிபலிக்கும் பரலோக பிதாவின் வார்த்தை"**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 95**

# தேவன் அருளிய ஈவு

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்களை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம் தேவன் நமக்கு கொடுத்த ஈவான வேதாகமத்தைப் பற்றி தியானிப்போம்.

வேத அறிவை பெற்றுக்கொள்ளாத ஒருவர் இந்த உலகத்தின் மிகச்சிறந்த அறிவை இழந்துவிட்டவராகவே இருக்கின்றார். வேத புத்தகம் இந்த உலகத்தின் மிகச்சிறந்த மாண்பை கட்டுவதாகவும், நிலைநிற்க செய்வதாகவும் இருக்கிறது. தேவன் யார் என்பதையும், நமக்கான அவருடைய விருப்பம் என்ன? என்பதையும் வேத புத்தகத்தினால் மாத்திரமே ஒருவர் அறிந்துக்கொள்ள முடியும்.

**'Biblos'** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து பைபிள் (Bible) என்ற வார்த்தை வந்தது. இதன் பொருள் 'புத்தகம்' என்பதாகும். வேதாகமம், அனைத்து மக்களுக்குமான அறிவுறுத்தலுள்ள தேவனுடைய புத்தகமாக இருக்கிறது. வரலாற்றில் மிக நீண்டகாலமாக வேத வசனங்களை போன்று அநேகருடைய வாழ்வை மாற்றியது பாதித்த வார்த்தைகள் (புத்தகங்கள்) வேறு எதுவும் இல்லை. ஏனென்றால், வேதமானது மனிதனுடைய நடக்கை மற்றும் நம்பிக்கைகளை சரிசெய்யும்படியாக தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய சத்தியமாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட, ஊக்கமளிக்கும் புத்தகங்களும் கடிதங்களுமான, அறுபத்தாறு புத்தகங்கள் அடங்கிய நூலகமாக வேதாகமம் இருக்கிறது. பொதுவாக, ஒரு மனிதனின் எழுத்துக்களை அடிப்படையாக கொண்டு மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மதங்களுக்கு நேர்மாறாக, 1500 ஆண்டுகளுக்கு மேலாக பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட 40 வித்தியாசப்பட்ட மனிதர்களைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகமாக வேதாகமம் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் பல நூற்றாண்டுகளில் மாறுபட்ட காலங்களில் வாழ்ந்திட்ட வித்தியாசமனவர்களாயிருந்தாலும், வேத புத்தகத்தில் எந்த வித முரண்பாடும் இன்றி ஒருமித்த கருத்தே உள்ளது என்பது வியப்பான விஷயமாகவே இருக்கின்றது. நிச்சயமாகவே அவர்களைவிட வல்லமையான ஒருவரால் அவர்கள் அனைவரும் வழிநடத்தப்பட்டிருந்தாலொழிய, இது சாத்தியமாகியிருக்காது. தேவனுடைய குமாரனகிய இயேசுகிறிஸ்துவின் பழுதற்ற பலியினால் மனிதனுக்கு நித்திய இரட்சிப்பை உண்டாக்குவதே வேத புத்தகத்தின் ஒருமித்த மிகச்சிறந்த கருத்தாகும் . தேவன், மனுக்குலம் அனைத்தையும் நித்திய பரலோகத்திற்குள் கொண்டு சேர்க்க அனைத்து தகவல்களையும் வேத புத்தகத்தில் வெளிபடுத்தியிருக்கிறார்.

## 1. வேதபுத்தகம் மனித குலத்திற்கான தேவனுடைய ஆசீர்வாதம்

தேவன் மனித குலத்தை ஆசீர்வதிக்கும்படியாக கொடுத்த மிகப்பெரிய அவருடைய கொடைதான் பரிசுத்த வேதாகமம். வேத புத்தகத்தின் வாயிலாக ஒருவர் தேவன் யார் என அறிந்து, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் போது, எல்லாம் வல்ல தேவன் அந்த ஒரு நபரை மிகவும் ஆசீர்வதிக்கிறார். அப்படி ஆசீர்வதிக்கப்பட்டவர்களை, வேதாகமம் நெடுகிலும் நாம் வாசித்து அறிய முடியும். ஆனால், அதையும் தாண்டி ஒரு மிகப்பெரிய விஷயம் என்னவென்றால், வேத புத்தகம் தேவனால் கொடுக்கப்பட்ட மனிதனுக்கான மிகப்பெரிய ஆசீர்வாதம் என்பதே! நம்மை படைத்தவர் யார் என்பதும், அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது எப்படி என்றும் அறிவது மிகவும் அவசியமான ஒன்று; அதுமட்டுமல்லாது அது ஆசீர்வாதமான ஒன்றாகவும் இருக்கின்றது. **2 தீமோ 3:16,17 "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."**

ஒருவர் மிகவும் மோசமானவராக இருந்தாலும், அவர் வாழ்வு எவ்வளவு அலங்கோலமாக இருந்தாலும், அந்த நபர் வேத வசனங்களுக்கு தன்னை ஒப்புக்கொடுப்பாரானால், வேதம் அவருடைய வாழ்வை நெறிப்படுத்தி, மிகவும் அழகாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் வேத வசனங்கள் தேவனால் பேசப்பட்டவைகள் **(மத் 22:43; அப் 1:16; 2தீமோ 3:16):** அவை பரிசுத்த தேவனால், பரிசுத்த ஆவியானவர் வழியாக, மனித

குலத்தை வந்தடைந்த மிகப்பெரிய பொக்கிஷம் (யோவா 14:26: யோவா 16:13, 1கொரி 2:10–13, 2பேது 1:20,23). தேவனுடைய பரிசுத்த மனிதர்களைக்கொண்டு அவைகள் எழுதப்பட்டது (யாத் 24:4: 2சாமு 23:2: ஏசா 51:6: எரே 34:4–6: எசே 11:5: 1கொரி 14:37). ஒரு மனிதனுடைய வாழ்வின் எல்லா நேரங்களுக்கும் ஏற்ற புத்தகமாக அது இருக்கிறது (எரே 1:9: 1தெச 2:13, எபி 1:1,2).

## 2. வேதாகமம், தேவனுடைய வார்த்தை என நாம் உறுதியாக நம்பலாம்!

தெய்வீக ஆதாரத்தை அஸ்திபாரமாக கொண்டதாக வேதாகமம் இருக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தைகளை வெறுமனே போதிப்பதற்கும் எழுதுவதற்கும் மனிதர்களை அனுப்பாமல், அவர்களை கொண்டு அற்புதங்களையும் நடப்பித்து, அவைகளால் தமது வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். மாற் 16:19–20 "இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடபித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்".

வேத வசனங்களை பேசியவர்கள், எழுதியவர்கள் அனைவரும் தங்கள் சுய ஞானத்தினால் அவைகளை செய்யவில்லை; மற்றும் அவர்கள் தங்கள் விருப்பங்களையும் எழுதவில்லை. 2 பேதுரு 1:19–21 "அதிக உறுதியான தீர்க்கதரிசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."

இன்றைய நாட்களிலும் வேதாகமம், தொல்பொருள் ஆராய்ச்சி, அறிவியல் மற்றும் பல்வேறுபட்ட சோதனைகளால் நம்பத்தகுந்த புத்தகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதாகமமம் மனிதனுக்கான தேவனுடைய செய்தியாக இருக்கிறபடியால், அதை மாற்றவோ, திருத்தவோ நம்மில் யாருக்கும் அதிகாரம் இல்லை. அவ்வாறு செய்வது மிகவும் தண்டனைக்குரிய பாவமாக இருக்கிறது. வெளி 22:18,19 "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்."

தேவன் தமது அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் மற்றும் பலத்த செய்கைகளினாலும், நேர்மையினாலும் வேதாகமத்தினை தன்னுடைய வார்த்தையாக நிரூபித்திருக்கிறார் (1ராஜா 18:30: யோவா 20:30,31: அப் 2:33: அப் 4:29–30: 1கொரி 2:1–55: கலா 3:5: எபி 2:3–4). ஆகையால், நாம் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை முழுமையாக நம்பலாம்.

## 3. வேதாகமம் நம்முடைய வாழ்வை மாற்றக்கூடியது!

ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் சரி, அவர்கள் வேதாகத்தை தேவனுடைய வார்த்தை என்று விசுவாசித்தால், அவர்களுக்கு வேதாகமத்தின் செய்திகள் மிகப்பெரிய பொக்கிஷமாகும். விசுவாசிக்கின்ற அந்த நபர், வேத வசனங்களுக்குக் கீழ்படியும் போது, அது அவரை சுயத்தை தூக்கியெறிய செய்து, தேவனுடைய விருப்பத்திற்கேற்ற நபராக மறுரூபமாக்கிட (உருமாற்றம் அல்ல, உள்ள மாற்றம்) வல்லமையுள்ளது. எபி 4:12 "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவ குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."

வேத வசனங்களை நம் இருதயத்தில் வைத்துக்கொள்ள முடியும் (கொலோ 3:16:1யோவா 2:14). வேத வசனங்கள் நம் உள்ளத்திலிருக்கும் போது, அது நம்மை தேவனுக்கு விரோதமான பாவத்திற்கு விலக்கி காக்கும் (சங் 37:31:119:11): மேலும் வேத வசனங்ளளுக்கு ஒருவர் நேர்மையுடன் கீழ்ப்படியும் போது, நிச்சயமாகவே வேத வசனம் அவரது வாழ்வை மாற்றும் (யாக் 1:22–25: 1 யோவா 1:6–7:2 யோவா 4: 3,யோவா 3–4)

காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்தவர்களைக் கூட மிகவும் நாகரீகமானவர்களாய் வேத வசனம் மாற்றியிருக்கிறது. ஏன் அற்றவர்களை வெளியே சொல்ல வேண்டும்? வேத வசனம் ஒருவரது வாழ்வை மாற்றும் என்பதற்கு நானும், நீங்களுமே பெரிய

உதாரணம் அல்லவா ! அது நம்மை, நம்முடைய வாழ்வை மாற்றி, அதன் தரத்தை எவ்வளவாக உயர்த்திருக்கிறது.

### 4. வேதாகமம் எல்லாவற்றிற்கும் போதுமான தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது.

தேவனுக்கு பிரியமாக இருப்பதற்கு ஒரு கிறிஸ்தவனிற்கு தேவையான எல்லா வழிகாட்டுதல்களையும் வேதாகமமானது தன்னிடத்தில் வைத்துள்ளது. அது எல்லாவற்றிற்கும் போதுமானதாக இருப்பதால், வேதாகமமானது நம்முடைய வாழ்விலே பல மாற்றங்களை கொண்டுவர வல்லமையுள்ளது.

வேதாகமம் நம்முடைய வாழ்வை மாற்ற வல்லமையுள்ளதாயிருக்கிறது (1பேதுரு 2-1-2: 2 பேது 1:3, 1தெச 4:1, 3 யோவா 3-4). நமக்கு நித்திய ஜிவனுக்குள் வழிநடத்த வல்லமையுள்ளதாயிருக்கிறது (யோவா 8:51; யோவா 5:24, 11:26). நமக்கு விடுதலை கொடுக்கதக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது (யோவா 8:32, யாக் 1:25)., தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவதில் போதுமானதாயிருக்கிறது (நீதி 22:6, சங் 119:103-105; ரோம 15:4). மேலும், தேவனுடைய ஊழியத்தை ஜாக்கிரதையுடன் நாம் செய்ய போதுமானதாயிருக்கிறது (1கொரி 4:14; 10:11; 2 தீமோ 4:1-2; தீத்து 1:9): அது மட்டுமல்லாது நாம் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ, நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்திட போதுமானதாயிருக்கிறது (2 தீமோ 3:16-17; 1 பேது 5:12, கொலோ 1:5-10; 1 தீமோ 3:14).

வேத வசனம் நமக்கு சமாதனத்தையும் தரவும் (சங் 119:15), நமக்கு சந்தோஷத்தைத் தரவும் (சங் 119:92), நமக்கு வல்லமையைத் தரவும் (எபி 4:12), நம்மை விடுவிக்கவும் (யோவா 8:32), நம்மை பரிசுத்தப்படுத்தவும் (யோவா 17:17), நம்மை ஞானவான்களாக்கவும் (சங் 119:99-100), நமக்கு ஜீவனைத் தரவும் (யோவா 6:63), நம்மை பூரணப்படுத்தவும் (யாக் 1:25), நாம் தேவபக்தியுள்ளவர்களாய் வாழ்ந்து, நித்திய ஜீவனை சுதந்தரிக்கவும் (2பேது 1:3), மற்றும் நம்மை நியாயந்தீர்க்கவும் (யோவா 12:48) என எல்லாவற்றிற்கும் போதுமானதாக இருக்கிறது.

தேவன் அவருடைய வார்த்தையை நமக்கு போதுமானதாக கொடுத்திருக்கிறார் (மத் 4:4). நாம் தான் நூற்றுக்கதிபதியை போல, அவருடைய வார்த்தை மட்டும் போதுமானது என விசுவாசித்து (மத் 8:8), வாழ வேண்டும்.

### 5. வேதாகமம் மனிதனுக்கான தேவனுடைய கடைசி வெளிப்பாடாகும்.

வேதாகமமானது மனிதனுக்கான தேவனுடைய சத்தியத்தின்கடைசி வெளிப்பாடாக இருக்கிறது. வெளிப்படுத்தல் என்ற வேதாகமத்தின் கடைசி புத்தகமாக எழுதியதின் மூலம், தேவன் இந்த உலக வரலாற்றில் கடைசி காலங்களில் மனிதன் தெரிந்துக்கொள்ளும்படி விரும்பிய எல்லா வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தி முடித்துவிட்டார். எபி 1:1-2 "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்."

பரலோக தேவன், வேதாகமத்திற்கு வெளியே நமக்கு எதையும் வெளிப்படுத்த போவதாக எந்த வாக்கும் அளிக்கவில்லை. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிற பரிசுத்த ஆவியானவரேகூட, சுயமாய் எதுவும் பேசாமல், கிறிஸ்து போதித்தவைகளின்படி தான் நம்மை வழிநடத்துவார் என்று, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே சொன்னார். யோவான் 16:13-15 "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்."

இவ்வளவு உறுதியாக ஆண்டவர் சொன்னபின்பும், அத்தேனே பட்டணத்தாரை போன்று (அப் 17:21), நூதனமான உபதேசங்களை தேடி அலையும் கூட்டம் நம்மிடையே உண்டு என்பது அதை விட கொடுமையானதாகும். நமக்குள் விசுவாசத்தை உண்டாக்கவும், அதை வேரூன்ற செய்யவும் வேத வசனங்களே போதுமானமதாக இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம் (ரோமர் 10:17; 14:23; 15:4).

வேதாகமம், ஆண்டவர் இயேசுகிறிஸ்து, கெம்பீரமாக ராஜாதி ராஜாவாக இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வருவார்; செம்மறியாடுகளை பரலோகத்திற்கும், வெள்ளாடுகளை நரகத்திற்கும் அனுப்புவார்; அவரே அந்த அதிகாரம் உடையவராக இருக்கிறார் என்று நம்மை எச்சரிக்கிறது (மத் 25).

இன்னும் சிலர், ஆண்டவர் இயேசு ரகசியமாக

வருவார் என்கின்றனர். நிச்சயமாகவே வேதவசனத்தில் இதற்கான தெளிவான மற்றும் உறுதியான ஆதாரம் இல்லை; 'ரகசியமாகவே வருவேன்' என இயேசு வாக்குறைக்கவும் இல்லை; அவர் எல்லோரும் பார்க்கும்படியாக எப்படி சென்றாரோ, அப்படியே எல்லோரும் பார்க்கும் வண்ணமாகவே திரும்ப வருவார் என்றும் வேதாகமம் கூறுகின்றது அவரது வருகை என்பது இந்த உலகத்தின் முடிவு என்றும் வேதாகமம் தெளிவாக கூறுகின்றது (அப் 1:9-11, வெளி 1:6-8, 2பேது 3:8-14). இயேசு, என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்கு உரியது அல்ல என்று சொல்லிய பின்பும் (யோவான் 18:36), அவர் ஆயிரம் வருடம் பூமியில் அரசாளுவார் என்கின்றனர்.

அப்படிபட்டவர்கள் சில வசனங்களை சொல்கின்றனர்; உண்மையிலே அதற்கு பொருள் அது தானா என யோசிப்பதில்லை. திருடன் வருகிற விதமாய் அவர் வருவார் என்பது, அவர் ரகசியமாக வருவார் என்பதாக அர்த்தமில்லை; அது, நாம் நினையாத வேளை என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார் (மத் 24:37-51). அவருக்கு ஆயிரம் வருடம் ஒரு நாள் போன்றது என வேதவசனம் சொல்லியிருக்கிறது (2பேது 3:10-12) என வேதாகமம் நம்மை உறுதியாக எச்சரிக்கிறது. அதுமட்டுமல்லாது, இப்படிப்பட்ட சாபத்திற்கேதுவான நூதனமான உபதேசத்தை விசுவாசிப்பது எவ்வளவு சாபக்கேடானதாயிருக்கும் (கலா 1:9-10) என்றும் எச்சரிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர், பவுலின் மூலம் தீமோத்தேயுவிற்கு கொடுத்த எச்சரிக்கையை நினைத்து, மிகவும் விழிப்புடன் வேத வசனத்தின் வெளிச்சத்திலே நடப்போம். 2 தீமோ 4:3-5 "ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று."

### 6.தேவன் வேதாகமத்தின் மூலமாகவே இன்று செயல்படுகிறார்.

தன்னுடைய வழிகாட்டுதலுக்கு கீழ்படியும் மனிதர்களுடைய வாழ்விலே, தேவனுடைய வெளிப்படுத்தபட்ட வார்த்தையானது பல வகைகளில் செயல்படுகிறது.

தேவன், வேதவசனங்களினால் நமக்கு விசுவாசத்தை தருகிறார் (யோவா 20:30-31; ரோம 10:17). நமது ஆத்துமாவை, இருதயத்தை சுத்திகரிக்கிறார் (யோவா 17:17; எபே 5:26; யோவா 15:2-3; 1 பேதுரு 1:22). நமது புத்தியை (மனக்கண்களை) தெளிவாக்குகிறார் (சங் 19:8), நம்மை ஆறுதல்படுத்துகிறார் (ரோம 15:4, 1 தெ 4:18), நம்மை ஆவியில் வளரச் செய்கிறார் (அப் 20:32; 1பேது 2:1-4; கொலே 1:10,11), மற்றும் நம்மை பிழைக்கச் செய்கிறார் (லூக்கா 4:4).

ஆண்டவர் நம்முடைய வாழ்விலே அவருடைய வசனங்களின் மூலமாகவே இடைபடுகிறார், பேசுகிறார் மற்றும் உறவாடுகிறார். வேத வசனங்களை கேட்கவோ, வாசிக்கவோ, அதன்படி நடக்கவோ தவிர்க்கும் ஒருவர், உண்மையிலேயே தேவனுடைய உறவைதான் புறக்கணிக்கிறார்.

"தேவன் எங்களிடம் பேச வேண்டாம்! நீர்பேசும்" என இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் சொன்னார்கள் இது எவ்வளவு வேதனையான காரியம் (யாத் 20:19). நீங்கள் வேதம் வாசிக்காத போதும், வேத ஆராய்ச்சிக்கு செல்லாத போதும், வேதவசனத்தின்படி வாழாமல் இருப்பதற்கும் காரணங்களை அடுக்கி நியாயப்படுத்த முற்படும் போதும், தேவனது குரலை, சத்தத்தை கேட்க மனதில்லாதிருக்கிறீர்கள்; மற்றும் தேவனுடைய பேச்சை கேட்காதபடி உங்களது காதுகளையும், இருதயத்தையும் அடைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதே நிசப்தமான உண்மை. எபி 3:7-8 "ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்."

இறுதியாக, அன்பானவர்களே! எல்லாம் வல்ல தேவன் நமக்கு கொடுத்துள்ள மிகப்பெரிய ஒப்பற்ற ஈவுகளில் ஒன்று வேதாகமம். நமக்கு போதுமானதாக அவற்றை அவர் தந்திருக்கிறார். மேலும், தேவன் வேதாகமத்தின் வாயிலாக நம்மோடு எப்பொழுதும் உறவாட விரும்புகிறார். ஆகையால் வேதாகமத்தை தினசரி தாவீதைப் போல வாசிப்போம், சுவாசிப்போம், விசுவாசிப்போம், யாசிப்போம் மற்றும் மனப்பாடம் செய்து இருதயத்திற்குள் பத்திரப்படுத்துவோம் (சங் 119:11,131,136,140,147,148). மேலும், ஆண்டவருடைய கட்டளைக்கிணங்க மற்றவர்களுக்கும் அறிவிப்போம் (மாற் 16:16).

– அன்புடன் ஆசிரியர்

## தனி நபர் வேத ஆராய்ச்சியில், வேதாகமம் முழுவதையும் தியானம் செய்ய உதவும் தொடர் பாடங்கள் !

# தொடர் 27 யோவான் : கிறிஸ்து, தேவகுமாரன்

### தலைப்பு

யோவான் சுவிசேஷம் அதை எழுதியவரின் பெயரைக்கொண்டுள்ளது. 'இயேசுவுக்கு மிகவும் அன்பாயிருந்த சீஷனான' (21:20, 24). யோவான் என்பவரே இதன் எழுத்தாளர் என்று உள்ளான மற்றும் புறம்பான சாட்சியங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. "யோவான்" என்பது, "யெகோவா கிருபையுள்ளவராய் இருக்கின்றார்" என்று அர்த்தப்படும் ஒரு எபிரெயச் சொல்லின் சுருக்க வடிவமாகும்.

### பின்னணி

இது கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நான்காவதும் இறுதியானதுமான விவரமாகும். இயேசுவின் வாழ்வுபற்றி நான்கு தனித்தனி விவரங்கள் உள்ளது. ஏன்? பழைய ஏற்பாடு அவ்வப்போது ஒரே நிகழ்ச்சி பற்றிய இரு விவரங்களைக் கொண்டுள்ளது; ஆனால் நான்கு விவரங்கள் என்பது வேதாகமத்தில் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. தேவன் நான்கு விவரங்களை நமக்குக் கொடுத்தது ஏன் என்பதற்கு, இங்கு சில சாத்தியக் கூறுகள் உள்ளன: (1) இவ்விவரங்கள் கிறிஸ்துவின் வாழ்வினுடைய முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றன. (2) இவைகள் இவ்விவரங்களின் உண்மைத்தன்மையைச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிலை நாட்டுகின்றன. இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் ஒரு விஷயத்தை "நிலைவரப்படுத்துகின்றன"; நான்கு என்பது இதைவிட மேலானதாக உள்ளது. (3) இயேசுவின் பன்முக இயல்பின் காரணத்தினால், அவரை ஒரே எழுத்தாளர் ராஜாவாகவும், ஊழியராகவும், மனுஷகுமாரனாகவும், தேவகுமாரனாகவும் சித்தரிப்பில் நியாயமாய்ச் செயல்பட்டிருக்க இயலாது.

யோவான் என்பவர் ஒரு மீனவராக இருந்தார் (மாற்கு 1:19,20; லூக்கா 5:10); இவர் இயேசுவைப் பின்பற்றும்படி அவரால் அழைக்கப்பட்டார். யோவான் பன்னிருவரில் ஒருவராக தேர்வுசெய்யப்பட்ட பின்பு (மத்தேயு 10:2), அவர் உள்வட்டத்தில் இருந்த மூவரில் ஒருவரானார் (மாற்கு 5:37-40; 9:2; 14:33). அவர் இயேசுவுடன் விசேஷித்த உறவு கொண்டிருந்தார் (21:20, 24), மற்றும் இயேசு சிலுவையில் மரித்தபோது அவரது தாயாரைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை இயேசு அவரிடத்தில் ஒப்புவித்தார் (9:25-27). பிற்பாடு யோவான் எபேசுவில் ஊழியம் செய்தார் என்று பலமான ஒரு பாரம்பரிய வரலாறு கூறுகிறது; இது, எபேசுவுக்கு மிகச்சமீபமாய் ஆசியாவின் கடற்கரையோரமாய் இருந்த பத்முதீவிற்கு (வெளிப்படுத்தின விசேஷம் 1:9) யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த நிகழ்ச்சியுடன் ஒத்துப்போகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 2:1ஐக் கவனிக்கவும்). அதே பாரம்பரியம், யோவான் தமது முதிர் வயதில் எபேசுவுக்குத் திரும்பினார் என்றும், அங்கே அவர் மரித்தார் என்றும் கூறுகிறது. யோவான் சுவிசேஷம் எபேசுவில் எழுதப்பட்டது என்று யூகிப்பது நியாயமானதாகவே உள்ளது.

அனேகமாக 90களில் யோவான் இப்புத்தகத்தை எழுதியிருக்கக்கூடும்; இது மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா ஆகியோரால் சுவிசேஷ நூல்கள் எழுதப்பட்டதற்கு மிகவும் பிற்பட்ட காலமாகும். ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்கள் ஏற்கனவே முப்பது அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான ஆண்டுகள் சுற்றுக்கு விடப்பட்டிருந்தபடியால், அவர்களின் பாடக் கருத்துகள் பலவற்றை யோவான் மீண்டும் எழுதவில்லை. அவர் கொடுத்த விவரங்கள் பெரும்பாலும் இந்த மூன்று சுவிசேஷ நூல்களுக்குத் துணைக்கருத்தை அளிப்பவையாய் இருக்கின்றன.

யோவான் எழுதிய சுவிசேஷம் தனக்கென்று விசேஷித்த வலியுறுத்தலைக் கொண்டுள்ளது. பல தவறான கருத்துக்கள் எழுப்பியிருந்தன (கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தின் மீதான பின்னணிக் குறிப்புகளில் "மதநம்பிக்கையின்மை என்ற தத்துவம் " மீதான குறிப்புகளைக் காணவும்). மாம்சம் யாவும் துன்மார்க்கமானது என்று சிலர் போதித்தனர். ஆகையால், அவர்கள் பூமியின் மீது நடந்த இயேசு, "கிறிஸ்துவாக" இருந்திருக்க முடியாது என்று முடிவு செய்தனர். அவர்கள், அவர் இயேசுவல்ல, ஆனால் ஆவியாக இருந்த கிறிஸ்து, மாம்சத்தில் இருந்த இயேசுவைக் கட்டுப்படுத்தினார் என்று போதித்தனர் (1 யோவான் பற்றிய குறிப்புகளைக் காணவும்).

ஆகையால் யோவான், "அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (1:14) என்று நமக்குக் கூறுவதின் மூலம் தமது விவரத்தைத் தொடங்கினார்.

யோவான் சுவிசேஷம் இயேசுவின் தெய்வீகத்தின்மீது வலியுறுத்தம் செய்கிறது; அவர் இயேசுவை "தேவகுமாரன்" என்று முன்வைக்கின்றார். 20:31ல் யோவான் தமது சுவிசேஷ விவரத்தை எழுதுவதற்கான காரணத்தைத் தருகின்றார்: "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, யோவான் இரண்டு முக்கியமான வலியுறுத்தங்களைக் கொண்டுள்ளார்; (1) ''நானே'' என்று வரும் ஏழு கூற்றுக்களில் பொதியப்பட்டுள்ள இயேசுவின் உரிமை கோருதல்கள் (6:35; 8:12, 58; 10:11; 11:25; 14:6; 15:1), மற்றும் (2) இயேசுவின் அற்புதங்கள். "அடையாளங்கள்" என்பது அற்புதங்களுக்கு யோவானுடைய விசேஷித்த வார்த்தையாக உள்ளது: அற்புதங்கள் என்பவை இயேசுவின் உரிமை கோருதல்கள் உண்மையாய் இருந்தன என்பதற்குத் தேவனிடத்தில் இருந்துவந்த அடையாளங்களாய் இருந்தன (2:23; 3:2; 4:54; 6:2, 14). இயேசுவின் ஏழு அடையாளங்கள் யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன (2:1–4; 4:46–56; 5:1–9; 6:14, 26, 30; 6:16–21; 9: 11).

யோவானுடைய விவரத்தில், கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின் நிரூபணத்திற்காகக் கொடுக்கப்படும் சரியான பதில்செயல் விசுவாசமாக இருக்கிறது. "விசுவாசத்தில்" என்ற வார்த்தை இந்தப்புத்தகத்தில் ஏறக்குறைய நூறு முறைகள் காணப்படுகிறது. நாம் விசுவாசிக்கவில்லையென்றால், நமக்கு நம்பிக்கை எதுவும் கிடையாது. இயேசு, "நானே அவர் என்று விசுவாசிக்காவிட்டால், நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (8:24). யோவான் யாருக்கு இதை எழுதினாரோ, அவர்களைப் பொறுத்தமட்டில், அவரது விவரம், எல்லாகாலத்திலும் வாழ்கின்ற எல்லா மனிதர்களுக்குமான "உலகளாவிய சுவிசேஷம்," என்று அழைக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் சொந்த ஊழியம் மூன்று ஆண்டுகள்வரையில் இருந்தது என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இது இயேசுவின் ஊழியத்தின்போது நடைபெற்றதாகக் குறைந்தபட்சம் மூன்று பஸ்கா பண்டிகைகளைப் பற்றி யோவான் குறிப்பிடுகின்றார் என்ற உண்மையின் அடிப்படையிலான கல்வித்துவமான யூகமாக இருக்கிறது (2:23; 6:4; 13:1).

### வரைகுறிப்பு

அறிமுகம் (1:1–18).

I. தேவகுமாரனும் அவரது வெளியரங்கமான ஊழியமும் (1:19–12:58).

II. தேவகுமாரனும் அவரது சீஷர்களும் (13–17).

A. இணையற்ற பிரியாவிடை உரை (13–16).

B. மறக்கப்பட்ட கர்த்தருடைய ஜெபம் (17).

III. தேவகுமாரனும் எல்லா மனிதர்களும் (18–21).

A. கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்படுதலும் விசாரணைகளும் (18:1–19:16).

B. கிறிஸ்துவின் மரணமும் அடக்கமும் (19:17–42).

C. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் விளக்கமும் (20:21).

### யோவான் சுவிசேஷத்தில் இருந்து பாடங்கள்

யோவான் சுவிசேஷ விவரமானது எளிமையானதாகவும் ஆழமிகுந்ததாகவும் உள்ளது. கிரேக்க மொழியில் யோவான் சுவிசேஷப் புத்தகமானது, ஆரம்பநிலை கிரேக்க மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க பயன்படுத்தப்படுமளவுக்கு மிகவும் எளிமையானதாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், இப்புத்தகம் பல வழிகளில் சுவிசேஷ விவரங்கள் எல்லாவற்றிலும் பெரிதும் ஆழமிகுந்ததாக உள்ளது. இது வாசகரின் வாழ்நாள் முழுவதற்கும் அவரது கவனத்தைப் பற்றியிழுத்து வைக்கக்கூடியதாக உள்ளது.

யோவான் 3ல் உள்ள புதுப்பிறப்புப் பற்றிய போதனை, ஒப்பீட்டு சுவிசேஷங்களில் காணப்படாததும் சிந்தனையைத் தூண்டும் பகுதகளில் ஒன்றாகவும் உள்ளது. "மறுபடியும் பிறத்தல்" என்பது, மனம் மாறுதல் செயல் முறையைப் பற்றிப் பேசும் இன்னொரு வழியாக உள்ளது என்று 1 பேதுரு 1:22, 23, மற்றும் வசனப்பகுதிகளில் இருந்து காண்பித்தல் சுலபமானதாக உள்ளது; இது அடிப்படையில்

பேதுருவின் பின்வரும் அறிவுறுத்துதல் போன்றதாகவே உள்ளது: "நீங்கள் மனந்திரும்பி, .... ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (அப் நடபடிகள் 2:38). இருப்பினும் புதிய பிறப்பு பற்றிய கருத்தை அவ்வகையில் கடந்து சென்றுவிடுதல் என்பது இந்தச் சொற்றொடரில் மறைந்துகிடக்கும் அடிப்படையான மாற்றுதிறனுடைய செயல்தாக்கத்தைத் தவறவிடுதலாக உள்ளது. யோவான் எழுதிய முதல் நிருபமானது, யோவான் 3க்கு மிகச் சிறந்த விளக்கவுரையாக உள்ளது. அதில் அவர் மறுபடியும் பிறத்தலின் விளைவு பற்றி அடிக்கடி பேசுகின்றார்: 1 யோவான் 2:29; 3:9; 4:7; 5:1, 4.

மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷ புத்தகங்களில் காணப்படாததாக உள்ள இன்னொரு பகுதி யோவான் 14–17 ஆகும். இந்தப் பகுதியானது, இயேசுவின் சீஷர்களை அவரது மரணத்திற்கு ஆயத்தப்படுவதற்காக, அவரால் அவர்களுக்குத் தரப்பட்ட "இணையற்ற பிரியாவிடை உரை"யுடன் தொடங்குகிறது. இது 17ம் அதிகாரத்தில் இயேசுவின் அற்புதமான ஜெபத்தில் ஜெபமாக (வசனங்கள் 1–5), அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்த ஜெபமாக (வசனங்கள் 6–19), மற்றும் எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபித்த ஜெபமாக (வசனங்கள் 20–26) உள்ளது. இயேசுவின் ஜெபத்தில், வசனங்கள் 20–23ல் காணப்படுகிற ஒருமைப்பாடு என்ற விஷயத்திற்குப் பதில் அளிக்க, நாம் நமது பங்கைச் செய்வது அவசியமாக உள்ளது!

## பொதுவான செய்திகள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள் – இரட்டை மலை சீனிவாசன்

- திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் (ஜூலை7, 1859 - செப்டம்பர் 18, 1945) ஒரு இந்தய அரசியல்வாதி, சமூக சீர்திருத்த செயல்பாட்டாளர், வழக்கறிஞர், ஆதி திராவிட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்).
- தமிழகத்தில் பட்டியலின மக்களிடையே எழுந்த முன்னோடி ஆளுமைகளுள் ஒருவர் இரட்டைமலை சீனிவாசன்.
- இந்திய அளவிலான பட்டியலின் மககளின் அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால், அதில் தமிழகத்துக்கு முக்கிய இடமுண்டு.
- ஆங்கிலேய ஆட்சி நிலை பெற்றதன் பின்னணியில் இந்தியா நவீன யுகத்தை எதிர்கொண்டது. அப்போதே நவீன சிந்தனைகளையும் வாய்ப்புகளையும் உள்வாங்கிச் செயல்பட்டதலைவர்.
- சீனிவாசன் பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள கோழியாளம் என்கிற சிற்றூரில் சடையன் என்பவருக்குப் பிறந்தார்.
- கோழியாளத்திலிருந்து இவருடைய விவசாயக் குடும்பம் வறுமை காரணமாகவும், சாதியக் கொடுமை காரணமாகவும் தஞ்சை நோக்கி இடம் பெயர்ந்தது.
- அங்கு அதைவிடக் கொடிய சாதிய அடக்குமுறை தாண்டவமாடியதால், இவரது குடும்பத்தார் அங்கிருந்து கோயம்புத்தூர் சென்றனர்.
- கோயம்புத்தூரில் இவர் கல்வி பயின்ற பள்ளியில் சுமார் 400 மாணவர்களில், 10 மாணவர்கள் தவிர மற்ற அனைவருமே பிரமாண மாணவர்கள் எனத் தன் வாழ்க்கைச் சுருக்கத்தில் அவரே எழுதியுள்ளார்.
- தீண்டாமைக் கொடுமைக்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது என்பதைப் பற்றியே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருந்தார்.
- 1887ஆம் ஆண்டில் ரெங்கநாயகி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 பெண்பிள்ளைகளும் 4 ஆண்பிள்ளைகளும் பிறந்தனர்.
- நீலகிரியில் ஓர் ஆங்கிலேயர் நிறுவனத்தில் எழுத்தராக வேலைக்குச் சேர்ந்தார்; பத்து ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின் 1890ல் சென்னைக்கு வந்தார்.
- கடைசி வரையில்அம்பேத்கருடனும், தமிழகத்தில் திராவிட இயக்கத்தினருடனும் நட்புணர்வுடன் செயல்பட்டு வந்தார்.
- இரட்டைமலை சீனிவாசனின் பணிகளைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசு, அவருக்கு இராவ்சாகிப், திவான் பகதூர், இராவ் பகதூர் ஆகிய பட்டங்களை அளித்துச் சிறப்பித்தது. இரட்டை மலை சீனிவாசனின் பணியைப் பாராட்டி திரு.வி.க அவர்கள் திராவிடமணி எனும் பட்டம் வழங்கி சிறப்பித்தார்.
- இவர் 1945 செப்டம்பர் 18, 2–45 மணியளவில் எண் 4, எம் வீரபத்திரன் தெரு, பெரியமேடு பகுதியில் என்பத்தி ஆறாம் வயதில் இயற்கை எய்தினார்
- இந்திய நடுவண் அரசு, 15, 08–2000ல் இரட்டைமலை அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

# மரியாள் தேர்ந்தெடுத்த நல்லபங்கு

பெண்கள் பகுதி



பேபி ராஜா.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

லூக்கா புத்தகம் 10ம் அதிகாரத்தில் மார்த்தாள், மரியாள் என்ற இரு சகோதரிகளை பற்றி படிக்கின்றோம். இந்த பகுதி நமக்கு பரிச்சயமானதே. மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்லபங்கை தெரிந்துக்கொண்டாள் என ஆண்டவர் இயேசு பாராட்டுகிறார். அதைக் குறித்து இந்த மாதம் நாம் தியானிப்போம்.

சகோதரிகளாகிய நாம் அநேக உலக வேலைகளை செய்கின்றோம். அதாவது வீட்டில் சமைப்பது, பிள்ளைகளை பள்ளிபாடங்களை கவனித்துப் படிக்க வைப்பது, கணவர் வேலைக்கு செல்ல அவர்களுக்கு செய்ய வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வது, அதன் பிறகு நாம் வீட்டை சுத்தம் செய்து விட்டு, பின்பு எல்லா வேலைகளையும் முடித்த பிறகு நன்றாக தூங்கி ஓய்வு எடுக்கிறோம். ஆனால் நம் பிள்ளைகளையும், கணவரையும் வேதம் வாசித்து, படிக்க வைக்கவோ, ஜெபம் பண்ணவைக்கவோ வசனத்திற்கு (பைபிளின் கட்டளைகளுக்கு) நாம் இடம் கொடுப்பதே இல்லை. அந்த காரியத்தை மறந்தும் விடுகிறோம். சகோதரிகளே! இதே மாதிரிதான் வேத வசனத்தில் மார்த்தாள் பற்பல வேலைகளை செய்து பெலவீனமானாள் என்று பார்க்கிறோம். லூக் 10:40 "மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா (அக்கறையில்லையா)? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்."



இந்த மார்த்தாளும், மரியாளும் இயேசுவை ஏற்று கொண்டவர்கள். மரியாளும் மார்த்தாளும் உடன் பிறந்த சகோதரிகள். இவர்களுக்கு லாசரு என்ற சகோதரனும் உண்டு. இயேசுவை ஒரு நாள் தன் வீட்டிற்கு அழைத்தார்கள். லூக் 10:3 "பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்"

மார்த்தாள் எப்பொழுதும் சுறுசுறுப்பான செயல்களையும், வேலை செய்யும் இயல்புடையவள். இயேசு வந்திருக்கிறார் என்றவுடன் தன் செயல்களில் (வேலையில்) இறங்கினாள். நீதிமொழிகள் 31:12 சொன்னபடி "அவள் சோம்பலின் அப்பத்தை புசியாமல் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாய் இருந்தாள்."

ஆனால் இவள் சகோதரியாகிய மரியாள் இவளைப்போல அல்ல. இயேசு தன் வீட்டுக்கு வந்ததை அறிந்து, மகிழ்ச்சியுடன், வேத வசனங்களை கற்றுக்கொள்ளும்படி இயேசுவின் பாதத்தின் அருகில் போய் அமர்ந்தாள் என்று பார்க்கிறோம். லூக்கா 10:39 "அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்."


ஆண்டவர் வசனத்தை போதிப்பதை மரியாள் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ, பற்பல வேலைகளை செய்து மிகவும் வருத்தமடைந்து, சோர்வடைந்து, 'என் சகோதரி எனக்கு உதவி செய்யாமல் வந்ததுப்பற்றி உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்கு சொல்லும்' என்றாள். உடனே இயேசு மார்த்தாளே! மார்த்தாளே! நீ உலக காரியங்களை குறித்து கவலைபடுகிறாய்; தேவையானது ஒன்று! மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்' என சொல்வதை லூக் 10:51,42ல் பார்க்கிறோம்.

பிரியமான சகோதரிகளே! நாமும் கூட இப்படிதான் உலக காரியங்களில் அதிகம் நேரம் செலவிடுகிறோம். ஒரு நாள் வேத வாசிப்புக்கு எவ்வளவு நேரம் கொடுக்கிறோம். நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம். மார்தாளைப்போல நாமும் உலகக்காரியங்களில் அதிகம் செயல்படாமல் நல்ல பங்கை ஏற்றுக்கொண்டு, மரியாளைப்போல வேதம் வாசிப்பதிலும், வேதம் ஆராய்வதிலும், சபையின் மூலம் நடக்கும் எல்லாம் கூட்டங்களுக்கும் சென்று வசனத்தை கேட்டு பெலனடைவதிலும், வசனத்தை பற்றி அநேக பேருக்கு எடுத்து சொல்வதிலும் ஈடுபட்டு, மரியாள் தெரிந்துக்கொண்டது போல நாமும் நல்ல பங்கைத் தெரிந்து கொள்வோம். இதுவே நமக்கு தேவையானது என்றும், நம்மைவிட்டு எடுபடாது (நிலையானது) என்றும் கர்த்தர் சொன்னதை நினைவில்கொள்வோம். கர்த்தர் தாம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. இவர்கள் பெற்ற ஆசீர்வாதத்தை சகோதரிகளாகிய நாமும் பெறுவோம்!

# வேதாகமம் ஞானம் தரும் – சாலொமோன் சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை பைபிளை படித்ததால் ஞானமடைந்த ஒருவரைப் பற்றி படிக்கலாம்.

இஸ்ரவேல் நாட்டை தாவீது ராஜாவுக்கு பிறகு அவருடைய மகனான சாலொமோன் ஆட்சி செய்தார். அவர் சிறுபிள்ளையாக இருந்ததினாலே தேவனிடம் ஞானம் வேண்டி ஜெபம்செய்தார். தினமும் வேத வசனத்தை படிப்பதின் மூலம் அந்த ஞானத்தை வளர்த்துக்கொண்டார். அப்பொழுது நடந்த நிகழ்வு என்னவெனில், இரண்டு பெண்கள் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். இருவருக்கும் ஒரே நேரத்தில் குழந்தை பிறந்தது. ஒரு நாள் இரவு அந்த பெண்களில் ஒருத்தி, தூக்கத்தில் தன் குழந்தையின் மீது புரண்டு படுத்து அதை கொன்றுவிட்டாள். அதன் பிறகு அவள் இறந்த குழந்தையை கொண்டு போய் இன்னொரு தாயிடம் போட்டுவிட்டு உயிருள்ள குழந்தையை தன்னிடத்தில் வைத்துக் கொண்டாள். இதைக் குறித்து இருவருக்கும் சண்டை வர, சாலொமோன் ராஜாவிடம் நியாயம் கேட்க சென்றனர். அவர் வழக்கை கேட்டவுடன் என்ன செய்தார் தெரியுமா? ஒரு போர் சேவகனை அழைத்து, வாளைக் கொண்டுவந்து குழந்தையை இரண்டாக வெட்டச் சொன்னார். அப்படியே அவன் வாளை எடுத்து வெட்டபோகிற போது, உண்மையான தாய் பதறி குழந்தையை வெட்டி போடாதீர்கள் என்று கதறினாள். அதற்கு ராஜா: இவள் தான் உண்மையான தாய்; குழந்தையை இவளிடம் ஒப்படையுங்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.



சாலொமோன் ராஜா இப்படி ஞானமாக தீர்ப்பு வழங்கினதை கேள்விப்பட்டவர்கள், அவர் ஞானத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அவர் ஞானத்தை கேள்விபட்ட சேபா நாட்டு ராணி, அவரை தேடிவந்து அவர் ஞானத்தை சோதித்து அதை புகழ்ந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த ஞானத்தினாலே அவர் கட்டின தேவாலத்தையும், அரண்மணையும் கண்டு பிரமித்தார்கள்.

குட்டீஸ், சாலொமோன் ராஜாவுக்கு இவ்வளவு பெரிய ஞானம் எப்படி வந்ததென்றால்: அவர் தேவனிடம் ஜெபம் செய்து ஞானத்தை பெற்றுக்கொண்டார். அதுமட்டுமல்லாது, ராஜாக்கள் வேத வசனத்தை எழுதி பெற்று கொண்டு, தினமும் அதை படிக்கும்படி கட்டளை பெற்றிருந்தனர். தினமும் வேதத்தை படித்து ஞானத்தை சாலொமோன் வளர்த்துக்கொண்டார். அவரைப்போல நீங்கள் ஞானத்தை பெற, தினமும் பைபிள் படித்து (உங்களுக்கென்று ஒரு தனி பைபிள் வைத்துக் கொள்ளுங்கள்). ஜெபம் செய்ய வேண்டும். தேவன் உங்களுக்கு ஞானத்தை தருவார்!

**மனப்பாட வசனம் : சங்கீதம் : 19:17**

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது."

– அக்கா. குமினி பிரதீப்

# வேதாகமம் வெற்றி தரும்

கர்த்தருடைய பிள்ளைகளா, உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலமாக வாழ்த்துகிறேன். பள்ளி விடுமுறையினால் சந்தோஷமாக இருப்பீர்கள்! இந்த சந்தோஷத்தோடு பைபிள் எப்படி ஒருவருடைய வாழ்வில் அவருக்கு வெற்றி தரும் என்று கற்றுக்கொள்ளலாமா?

பைபிள் முழுவதும் ஆண்டவர் இயேசுவை பற்றிதான் அதிகம் சொல்லப்பட்டுள்ளது. இந்த இயேசு ஆண்டவர் பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்தார், உங்களைப்போல சின்ன வயதில், அதாவது 12 வயதில் தேவாலயத்தில் மிகப்பெரிய போதகர்களோடு வேத வசனங்களை குறித்து உரையாடினார். பைபிள் வசனத்தை அதிகமாக கற்றுக்கொண்டார். அது மட்டுமா? அதின்படி நடந்தார், மற்றும் அநேகருக்கு அவைகளை குறித்து எப்போதும் பேசினார். இதனால் பாவத்தை ஜெயித்து பரிசுத்தமாக வாழ்ந்தார்.

ஒருமுறை சாத்தான், இயேசுவை மலைமேல் நிறுத்தி, இந்த உலகத்தையும், அதன் கவர்ச்சியையும் காண்பித்து, அவரை சோதித்து ஜெயிக்க பார்த்தான். ஆண்டவரோ, வசனத்தை சொல்லி, அவனை விரட்டி, அவனை ஜெயித்தார்.

இந்த உலகத்தில் எல்லோரையும் தோற்கடிக்கிற பாவத்தையும், அதன் சாபத்தையும், இந்த உலகத்தின் பாடுகளையும், ஆண்டவர் இயேசு ஜெயித்தார். அது மட்டுமா? மனிதர்களால் ஜெயிக்கவே முடியாத மரணத்தையும் அவர் ஜெயித்தார். எப்படி தெரியுமா? சிலுவையில் இயேசுவை கொன்று, கல்லறையில்

அடக்கம் செய்தனர்.

அது சரி, இயேசுவை ஏன் சிலுவையில் அறைந்தார்கள்?

நாம் கையினால் செய்த பாவத்திற்காக இயேசு கையில் ஆணி அடித்தார்கள். நீங்கள் யாரையாவது அடிப்பது, கிள்ளி வைப்பது, இதுமாதிரி செய்தால், இயேசு கையில் மீண்டும் நாமே ஆணி அடிக்கிறோம். நீங்கள் தவறானவைகளை (பொறாமை, பெருமை) யோசித்தீர்கள் என்றால், இயேசு தலையில் முள் முடி வைக்கிறீர்கள். நீங்கள் சபைக்கு போக வேண்டிய நேரத்தில் வேறு எங்காவது போனால், இயேசு காலில் நீங்கள் ஆணி அடிக்கீறீர்கள். இப்படி நானும் நீங்களும் செய்த பாவத்திற்காகத்தான் இயேசுவை சிலுவை அடித்தார்கள். ஆனால் ஆண்டவர் 3ம் நாளில் உயிரோடு எழுந்து வந்தார். இன்றும் உயிரோடிருந்து உங்களையும், என்னையும், அவரை நம்பி, அவர் சொல்படி நடக்கிற அனைவரையும் பாதுகாக்கிறார்.

குட்டீஸ்! வசனத்தை அதிகமாக படித்து, அதின்படி நடந்து, அதை மற்றவர்களுக்கும் சொன்னால், நீங்களும் ஆண்டவர் இயேசுவைப் போல, பாவத்தை ஜெயிக்கலாம். பரிட்சையில் ஜெயிக்கலாம், சாபத்தை ஜெயிக்கலாம், சாத்தானை ஜெயிக்கலாம், மேலும் எல்லாவற்றிலேயும் வெற்றி பெறலாம். தினமும் பைபிள் படிப்பீர்களா? நீங்கள் பைபிள் படிக்கவில்லை என்றால், ஜெபிக்கவில்லை என்றால், யாருக்காவது இயேசுவை பற்றி சொல்வில்லை என்றால் பாவம் செய்கிறீர்கள். அதனால் நம்மை உண்டாக்கின தேவன் வேதனைப் படுவார். எனவே ஒரு நாளைக்கு ஒரு வசனமாவது படிப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து வெற்றி தருவார்.



**மனப்பாடவசனம்:** யோவான் 8:32

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்."

– உங்கள் அண்ணன்

அன்பு ஏசுதாஸ்

## சிறுவர்கான கேள்விகள்

1. சாலமோன் ராஜா எதை கட்டினார்?
2. சாலமோனின் ஞானத்தை சோதித்த பெண் யார்?
3. சாலமோனுக்கு ஞானத்தை கொடுத்தவர் யார்?
4. இயேசுவை எவைகளையெல்லாம் ஜெயித்தார்?
5. ஞானமும், வெற்றியும் பெற நீ என்ன செய்ய வேண்டும்?

## தினசரி வேத வாசிப்பு

| நாள் | வாசிப்பு பகுதி | டிக் செய்யவும் |
|---|---|---|
| மே 16 | எஸ்றா 8-10 | ☐ |
| மே 17 | நெகேமியா 1-4 | ☐ |
| மே 18 | நெகேமியா 5-7 | ☐ |
| மே 19 | நெகேமியா 8-10 | ☐ |
| மே 20 | நெகேமியா 11-13 | ☐ |
| மே 21 | எஸ்தர் 1-4 | ☐ |
| மே 22 | எஸ்தர் 5-10 | ☐ |
| மே 23 | யோபு 1:1-5:16 | ☐ |
| மே 24 | யோபு 5:17-8:22 | ☐ |
| மே 25 | யோபு 9:1-12:12 | ☐ |
| மே 26 | யோபு 12:13-16:10 | ☐ |
| மே 27 | யோபு 16:11-20:11 | ☐ |
| மே 28 | யோபு 20:12-24:12 | ☐ |
| மே 29 | யோபு 24:13-29:13 | ☐ |
| மே 30 | யோபு 29:14-32:10 | ☐ |
| மே 31 | யோபு 32:11-35:16 | ☐ |
| ஜுன் 1 | யோபு 36:1-39:12 | ☐ |
| ஜுன் 2 | யோபு 39:13-42:17 | ☐ |
| ஜுன் 3 | சங்கீதம் 1-4 | ☐ |
| ஜுன் 4 | சங்கீதம் 5-8 | ☐ |
| ஜுன் 5 | சங்கீதம் 9-10 | ☐ |
| ஜுன் 6 | சங்கீதம் 11-16 | ☐ |
| ஜுன் 7 | சங்கீதம் 17-18 | ☐ |
| ஜுன் 8 | சங்கீதம் 19-21 | ☐ |
| ஜுன் 9 | சங்கீதம் 22-24 | ☐ |
| ஜுன் 10 | சங்கீதம் 25-27 | ☐ |
| ஜுன் 11 | சங்கீதம் 28-30 | ☐ |
| ஜுன் 12 | சங்கீதம் 31-33 | ☐ |
| ஜுன் 13 | சங்கீதம் 34-35 | ☐ |
| ஜுன் 14 | சங்கீதம் 36-38 | ☐ |
| ஜுன் 15 | சங்கீதம் 39-42 | ☐ |

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங் 1:2)

# வேதாகமத்தின் 66 புத்தகங்களில் இயேசு

| எண் | புத்தகம் | இயேசு யார் ? |
|---|---|---|
| 1. | ஆதியாகமம் | ஸ்திரீயின் வித்து |
| 2. | யாத்திராகமம் | பஸ்கா ஆட்டுக்குட்டி |
| 3. | லேவியராகமம் | பிரதான ஆசாரியன் |
| 4. | எண்ணாகமம் | மேகஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் |
| 5. | உபாகமம் | மோசேயைப் போன்ற தலைவன், தீர்க்கதரிசி |
| 6. | யோசுவா | நம்முடைய இரட்சிப்பின் தலைவன் |
| 7. | நியாயாதிபதிகள் | நியாயாதிபதி மற்றும் சட்டம் வழங்குபவன் |
| 8. | ரூத் | சொந்த இரட்சகர் |
| 9. | 1,11 சாமுவேல் | தேவனின் தீர்க்கதரிசி |
| 10. | 1,11 ராஜாக்கள்<br>1,11 நாளாகமம் | ஆளுகை செய்யும் அரசர் |
| 11. | எஸ்றா | உண்மையுள்ள சம்பிரிதி |
| 12. | நெகேமியா | உடைந்த அலங்கத்தை மீண்டும் கட்டுபவர் |
| 13. | எஸ்தர் | போர் வீரன் |
| 14. | யோபு | உன்னதத்திலிருந்து வரும் வசந்தம் |
| 15. | சங்கீதம் | கர்த்தர் எங்களுடைய மேய்ப்பராயிருக்கிறார் |
| 16. | நீதிமொழிகள், பிரசங்கி | ஞானம் |
| 17. | உன்னதபாட்டு | அன்பிற்குரியவர், மணவாளன் |
| 18. | ஏசாயா | சமாதானப்பிரபு |
| 19. | எரேமியா, புலம்பல் | அழுகையின் தீர்க்கதரிசி |
| 20. | எசேக்கியேல் | திருப்புமுனை |
| 21. | தானியேல் | அக்கினிச் சூளையில் 4வது நபர் |
| 22. | ஓசியா | பின்வாங்கிப் போன ஸ்திரியை மணக்கும் மணவாளன் |
| 23. | யோவேல் | அக்கினியாலும், பரிசுத்த ஆவியானாலும் ஞானஸ்நானம் பண்ணுகிறவர் |
| 24. | ஆமோஸ் | சுமை தாங்குபவர் (சுமப்பவர்) |
| 25. | ஒபதியா | வல்லமையான மீட்பர் |
| 26. | யோனா | மன்னிக்கும் தேவன் |
| 27. | மீகா | அழகான பாதங்களையுடைய சுவிசேஷகர் |
| 28. | நாகூம் | நீதியை சரிக்கட்டுகிற தேவன் |
| 29. | ஆபகூக் | மறுமலர்ச்சிக்காக அழுபவர், ஒப்பற்ற சுவிசேஷகர் |
| 30. | செப்பனியா | இழந்துபோன தேவனுடையர்களை மீட்பவர். |
| 31. | ஆகாய் | சுத்திகரிக்கும் நீரூற்று |
| 32. | சகரியா | இரக்கமுள்ள தகப்பன் |
| 33. | மல்கியா | நீதியின் புத்திரன், செட்டையின் கீழாக<br>சுகமும், கொழுமையும் அழிப்பவர். |
| 34. | மத்தேயு | மேசியா |
| 35. | மாற்கு | அதிசயம் செய்கிறவர் |
| 36. | லூக்கா | மனுஷ குமாரன் |
| 37. | யோவான் | தேவனுடைய குமாரன் |
| 38. | அப்போஸ்தலர் | பரலோகத்திற்கேறின கர்த்தர் |
| 39. | 1, 11 கொரிந்தியர் | ஆவியின் வரங்கள் |
| 40. | கலாத்தியர் | நம்மை விடுவிக்கும் ஒருவர் |
| 41. | எபேசியர் | ஐசுவரியமுள்ள கிறிஸ்து |
| 42. | பிலிப்பியர் | அனுதின தேவைகளை சந்திக்கும் கர்த்தர் |
| 43. | கொலோசெயர் | தேவத்துவத்தின் பரிபூரணம் |
| 44. | 1, 11 தெசலோனிக்கேயர் | அதி சீக்கிரத்தில் வரவிருக்கிற ராஜா |
| 45. | 1, 11 தீமோத்தேயு | தேவனுக்கும், மனிதனுக்குமான மத்தியஸ்தர் |
| 46. | தீத்து | விசுவாசமுள்ள மேய்ப்பர். |
| 47. | பிலேமோன் | சகோதரனைவிட நெருக்கமான நண்பர் |
| 48. | எபிரேயர் | என்னுடைய பாவங்களை கழுவிய இரத்தம் |
| 49. | யாக்கோபு | மிகச்சிறந்த வைத்தியர் |
| 50. | 1, 11, பேதுரு | பிரதான மேய்ப்பர் |
| 51. | 1, 11, 111 யோவான் | நித்தியமான அன்பு |
| 52. | யூதா | பரிசுத்தவான்களோடு பூமிக்கு வந்த கர்த்தர் |
| 53. | வெளிப்படுத்தின விசேஷம் | ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா. |

தமிழில் J.P

## மே மாதக் கேள்விகள்

1. எது ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது என இயேசு சொன்னார்?

2. "கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள்" என வாசிப்பதெங்கே?

3. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன் என்றது யார்?

4. கன்மலையை உடைக்கும் சம்மட்டியை பேல இருப்பது எது?

5. 'வாயை ஆவென்று திறந்து' எவைகளுக்கு ஏங்குவதாக சங்கீதகாரன் கூறுகிறார்?

6. 'நித்திய ஜீவ வசனங்கள்' யாரிடம் இருப்பதாக பேதுரு கூறுகிறார்?

7. 'ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை' அது, எது?

8. வானமும் பூமியும் ஒழிந்துப்போனாலும் எது ஒழியாது என இயேசு சொன்னார்?

9. சங்கீதக்காரன் எதற்காக 'தேவனுடைய வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்' என்கிறார்?

10. உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும் என ஜெபித்தது யார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-06-2018

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. 1 கொரி 15:52 | 6. வெளி 1:7 |
| 2. 1 தெச 4:16 | 7. 1 கொரி 15:23 |
| 3. 1 கொரி 15:42 | 8. ஏசா 25:8 |
| 4. வெளி 20:12 | 9. லூக் 24:6 |
| 5. யோ 5:28 | 10. வெளி 1:18 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. C. பிரியா – மதுரை
2. R. பியூலா – வளர்நகர்
3. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
4. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளாறம்
5. M. ஈஸ்வரி – கரூர்
6. G. ஏஞ்சலம்மாள் – ஒத்தக்கடை
7. J. விஜய் – ஒத்தக்கடை
8. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
9. திருமதி. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
10. Mrs. ஹெலன் திலக் – மதுரை
11. S. அஷோக்குமார் பிரின்மல் – கச்சாலாவிளை
12. R. சரோஜா – தென்கலம்
13. Mrs. J. ஜான்சி – ஆனைமலை
14. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் – சென்னை
15. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
16. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
17. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
18. N. லூயிஸ் ரூபி – ஆம்பூர்
19. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
20. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
23. திருமதி. சாந்தா மனோகரன் – திருச்சி
24. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
25. D. நேசமணி – நாமக்கல்
26. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
27. டெபோரா ஸ்டீபன் – சேலம்
28. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
29. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
30. Mrs. திரவியம் ஆனந்தம் – வேலூர்
31. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
32. D.S. ஜெபர்சன் – திண்டுக்கல்
33. Mrs. A. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
34. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
35. S. டேவிட் சாந்தகுமார் – திருநெல்வேலி
36. திருமதி. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
37. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
38. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
39. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. D. டேஃப்னி ஜீனித்தா – சென்னை
2. M. ராஜா – கரூர்
3. M. யோனத்தான் – கரூர்
4. A. ஹானா ஜோதி – ஒத்தக்கடை
5. A. கார்பஸ் பிலேமோன் – ஒத்தக்கடை

# சென்ற மாதம் நடைபெற்ற ஊழியங்களுக்காக தேவனை துதியுங்கள்!







அரசரடி கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற பெரியவர்களுக்கான வேனிற்கால வேதாகம வகுப்பில் கலந்து கொண்டோர்,
வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்று பரிசு பெறும் பார்வையற்ற சகோதரன்...










திருவாதவூர் கிறிஸ்துவின் சபையில்
சிறுவர்களுக்கான V.B.S. நடைபெற்றது



இம்மாதம் திருமுழுக்கு பெற்ற
பார்வையற்ற சகோதரி



மாதந்தோறும் ஏழைய பார்வையற்ற சகோதர சகோதரிகளுக்கும்,
திக்கற்ற விதவைகளுக்கும் அரிசி வழங்கப்படுகின்றது

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th May 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th May 2018

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்




அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



விடுமுறை காலங்களில்
வேதபாடங்களை படித்து
பைபிள் பரிசையும்
தேவ ஆசீர்வாதமும்
பெற்றுகொள்ளுங்கள்

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
92 4421 4421, 92 4431 4431

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To